DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முத்துக்குமர் | Caste: | |
| Father's Name: | முனியசாமி | Calling: | ரூப் மிஷின் ஆப்ரேட்டர் |
| Village: | கே. பாப்பாங்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 32 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 15.09.2025

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதியில் உள்ள கே. பாப்பாங்குளத்தில் வசித்து மதுரையில் Cooling sheet போடும் தொழில் செய்து வருகிறேன். சாட்சி விஜயை தெரியும். 2020ம் ஆண்டு எங்கு வேலை பார்த்தேன் என்றால் கொரானா காலம் என்பதால் ஊரில் இருந்தேன். கடந்த 08.08.2020ம் தேதி நானும் முனியாண்டி மகன் விஜயும் அவரது பைக்கில் கமுதி சென்று கொண்டிருந்தோம். அப்போது சிங்க புலியாப்பட்டி அரண்மனைமேடு அருகில் உள்ள TNCS குடோன் அருகில் டிஎஸ்பி நின்று கொண்டிருந்தார். அவர் எங்களை மறித்து எங்கள் ஊர் பெயர்களை கேட்டார். அப்போது எங்க ஊரைச் சேர்ந்த கருப்பணன் மகன் கே பூமிநாதன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் எதிரியான முத்துமணியை கைது செய்துள்ளதாகவும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க உள்ளதாகவும் அதற்கு நாங்கள் சாட்சிகளாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டார். அதற்கு நாங்களும் ஒப்புக்கொண்டோம். எங்கள் முன்னிலையில் முத்துமணி ஒரு

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது மணி காலை 8.20 இருக்கும். என்னை கூட்டிசென்றால் நான் பூமிநாதனை வெட்ட பயன்படுத்திய அருவாளையும் மூங்கில் கம்பையும் எடுத்து தருகிறேன் என்று கூறி பாப்பான்குளம் கண்மாய்க்கு கூட்டி சென்றார். மறைத்து வைத்திருந்த இரண்டு அருவாள்களையும் இரண்டு மூங்கில் கம்புகளையும் டிஎஸ்பியிடம் காட்டி ஆஜர் செய்தார். அப்போது டிஎஸ்பி அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் என்னிடமும் விஜயிடமும் கையெழுத்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.3.** அப்போது மணி 9.15 இருக்கும். 04.09.2020ம் தேதி டிஎஸ்பி காவல்நிலையத்தில் இருந்து எனக்கு போன் செய்து முருகன் என்பவரை விசாரிக்க வேண்டும் நேரில் வாருங்கள் என்று அழைத்தார். நானும் விஜயும் கமுதி காவல்நிலையம் சென்றோம். காவல்நிலையத்தில் வைத்து முருகனை டிஎஸ்பி விசாரித்தார். சம்பவத்திற்கு பயன்படுத்திய TVS Starcity பைக்கை அவரது சம்பந்தியான நல்லாங்குளம் கிராமத்தை சேர்ந்த கருப்பணன் வீட்டு மாட்டு கொட்டகையில் வைத்திருப்பதாக சொல்லி அழைத்து சென்றார். நான் , விஜய், டிஎஸ்பி மற்றும் முருகன் ஆகிய நால்வரும் அங்கு சென்றோம். அங்கு வைத்து முருகன் இருசக்கர வாகனத்தை எடுத்து கொடுத்தார். டிஎஸ்பி ஒரு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் விஜயும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.4**. என் முன்னிலையில் கைப்பற்றபட்ட அருவாள்கள், மூங்கில் கம்பு, இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். என்னால் முத்துமணி மற்றும் முருகனை அடையாளம் காட்ட முடியுமா

என்றால் முடியும். சாட்சி நீதிமன்றத்தில் உள்ள நான்கு நபர்களில் முத்துமணியையும், முருகனையும் சரியாக அடையாளம் காட்டினார். டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

பாப்பான்குளத்தில் இருந்து கமுதி எத்தனை கி.மீ இருக்கும் என்றால் 2 ½ கி.மீ. ஊரில் இருந்து கமுதிக்கு எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் காலை 7.30 மணி. நாங்கள் டிஎஸ்பி நின்று விசாரித்து கொண்டிருந்த இடமான அரண்மனைமேட்டிற்கு செல்லும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 8.20. நானும் விஜயும் ஒரே வாகனத்தில்தான் சென்றோம் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் பதிவு எண் சொல்ல முடியுமா என்றால் முடியாது. சம்பவம் நடந்த காலம் கொரானா காலம் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் மாலை முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் ஒரு கிராமத்தில் இருந்து நகரத்திற்கு செல்ல வேண்டும் என்றால் காவல்துறை அனுமதித்த நேரத்தில்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். என் அப்பா பெயர் முனியசாமி என்றால் சரிதான். என் அப்பாவும் காயம்பட்ட பூமிநாதனும் அண்ணன், தம்பி என்றால் சரிதான். எவ்வளவு நேரம் 1ம் எதிரி முத்துமணியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்து என்றால் 30 நிமிடங்கள் இருக்கும். அதை யார் எழுதியது என்றால் ஒரு ஏட்டையா எழுதினார். அது எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது என்றால் தெரியாது. அதில் எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என ஞாபகம் உள்ளதா என்றால் ஒரு கையெழுத்து போட்டேன். அந்த கையெழுத்து போடும் போது தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதன்பின் எத்தனை மணிக்கு

பாப்பான்குளம் கண்மாய்க்கு கிளம்பினோம் என்றால் 9 மணிக்கு கிளம்பி 9.15 மணியளவில் சென்றடைந்தோம். என்ன வகையான அருவாள்கள் அதனுடைய அளவு குறித்து என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேனா என்றால் படித்து பார்த்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலம் இரண்டு பக்கங்கள் கொண்டதாக இருந்தது. நான் சொன்னதுபோல் டிஎஸ்பி விசாரித்ததாக சொல்லப்படும் அரண்மனை மேட்டிற்கு செல்லவில்லை என்றும் அங்கு வைத்து 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலமோ அதனடிப்படையில் பாப்பான்குளம் கண்மாயில் வைத்து ஆயுதங்களோ காவல்நிலையத்தில் வைத்து டிஎஸ்பி கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் போகவில்லை என்பதால்தான் ஆயுதங்களின் அளவுகள் குறித்து குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் என் சொந்த சித்தப்பா என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் 10 மணிக்கு. நல்லாங்குளத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 11.45 மணி. எந்த வாகனத்தில் எல்லாரும் சென்றோம் என்றால் டிஎஸ்பி ஜீப்பில் சென்றோம். எத்தனை பேர் சென்றோம் என்றால் நான், விஜய், முருகன், டிஎஸ்பி, டிரைவர் ஆகிய 5 பேர். நல்லான்குளம் கமுதி காவல்நிலையத்தில் இருந்து எத்தனை கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் தெரியாது. நல்லான்குளம் விருதுநகர் எல்லைக்குட்பட்டு உள்ளது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியும் TN 65 W 3341 நீல நிறம் கொண்ட TVS Star City . அந்த வாகனத்தின் Enigne No, Chasis No. கைப்பற்றுதல் மகசரில்

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் நல்லாங்குளம் கிராமத்திற்கு செல்லவில்லை என்றும் என் முன்னிலையில் எந்த வாகனமும் கைப்பற்றப்படவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுதது போட்டேன் என்றும், அதனால்தான் Engine No, Chasis No சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், இடத்தில் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் முருகன் மட்டும் எங்க ஊரைச் சேர்ந்தவர். முத்துமணியை ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்த அன்று பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் சரியல்ல.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)